பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆவணி 13உ (29—8—67) செவ்வாய் ★ வெளியூர் : ஆவணி 14 (30—8—67) புதன் [இதழ் : 64

வாடையும் தென்றலும்

1965—67! இடையில் இரண்டாண்டுகள்!

இயற்கையும் செயற்கையும் சேர்ந்து, தமிழக அரசியலை எவ்வளவோ மாற்றிவிட்டன!

உலகம் வியந்து உணர்ந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் நடந்து முடிந்து இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன!

சிறு நெருப்பு பின்னர் எப்படிப் பெருந் தீயாக மாறியது—மாற நேர்ந்தது என்பதை நாடு அறியவில்லையானாலும், தமிழ் நாடு அறியும்!

அப்போது பக்தவத்சலம் முதலமைச்சர்!

மாணவர்களது மொழி ஆர்வம் தவருக உணரப்பட்டது!

அவர்களது வேட்கைகள் அடக்குமுறையால் கேலி செய்யப்பட்டன!

அவர்களது விருப்பங்கள் துப்பாக்கி கொண்டு நசுக்கப் பட்டன!

வாழ்ந்து காட்டவேண்டிய பலர், வாழ்க்கையை முடித்துக் கொள்ள நேர்ந்தது!

விளையாட்டுகளில் மட்டும் இரத்தம் சிந்தவேண்டிய அவர்கள்—அந்த வயதில்—மொழிக்காக இரத்தம் சிந்த வேண்டியிருந்தது!

அப்போது ஆட்சி செய்தவர்கள், பாஞ்சாலத்தைச் சேர்ந்தவர்களல்லர்! கலிங்கத்தில் பிறந்தவர்களும் அல்லர்! விதர்ப்பத்தில் வாழ்ந்தவர்களும் அல்லர்!

உணர்வால் உண்டோ இல்லையோ—பிறப்பால் தமிழர்களே! பேச்சினுல் நம்மவரே!

இடையில் இரண்டாண்டுகள்—அதற்கும் நடுவில் ஒரு பொதுத் தேர்தல்!

அவர்கள் இப்போது ஆட்சியில் இல்லை!

ஆனுல் அதே மாணவர்கள், கல்விக்கூடங்களில் இருக்கிருர்கள்!

அப்போது தலைமையமைச்சராக இல்லையென்றுலும், இந்திரா, சாஸ்திரி அமைச்சரவையில் ஓர் அமைச்சர்!

அது மட்டுமல்ல; 1965-ன்போது இங்கு எழுந்த 'நிலைமை' களைக் கண்டுசெல்ல வந்துபோனவர்!

அவர் இப்போது நாட்டின் தலைமை அமைச்சர்!

அண்ணு அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சர்!

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் கழக அரசு!

மொழிக் கொள்கை இப்போது முறையாக உணர்த்தப்பட்டிருக்கிறது!

தமிழுக்குப் பாதுகாப்பு; இந்தி ஆதிக்கத்துக்குத் தடுப்பு—இது இரண்டும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது!

இந்திரா வருகையின்போது மாணவர்கள் மீண்டும் தங்கள் உணர்வுகளை உணர்த்த விரும்பினர்!

"நாங்கள்தான் உங்களை முந்திக்கொண்டோமே—நீங்கள் வேறு வேண்டுமா?" என்பதுபோல், கழக அரசு மாணவர்களுக்கு அறிவுறுத்தியது!

தலைநகரில் பொதுப்பணி அமைச்சர், மாணவர்களைச் சந்தித்தார்!

பாண்டியன் தலைநகரில் அண்ணுவின் அன்பு வேண்டுகோளுக்கு மதிப்புத் தந்து, அங்கே உள்ள மாணவர்கள், தங்கள் திட்டத்தை ரத்து செய்தனர்!

பண்பின் உச்சக்கட்டம் இன்னும் இருக்கிறது—வாருங்கள், மீனம்பாக்கத்திற்கு!

மாணவர் பிரதிநிதிகள் அறுவர், மனு ஒன்றினை அளித்து இருபது நிமிட நேரம் இந்திராவுடன், 'மொழி நிலைமை' பற்றிப் பேசியிருக்கின்றனர்!

இரு தரப்பினருக்கும் இடையில் தமிழக முதலமைச்சர்!

இரண்டு ஆண்டுகளுக்குமுன் எதிரி நாட்டவர்போல் அவர்கள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டைமுன் அடித்து விரட்டப்பட்டதும், இப்போது பொறுப்புள்ள இருவர் மத்தியில் உரிமையுடன் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த அவர்களுக்குத் தரப்பட்ட தகுதியும், மனக்கண்களில் மாறி மாறி எண்ணிப்பார்த்து சிந்திக்கத்தக்கவையாக அல்லவா இருக்கின்றன?

அடித்த கரம் எங்கே! அணைக்கும் கரங்கள் எங்கே!

'கடலலைகளை அடக்குவேன்' என்ற ஆணவம் எங்கே!

கனிவுடன் மதிப்பு தரும் பெருந்தன்மை எங்கே!

அவர் அரசியலில் வாடை!

இவர் அரசியலில் தென்றல்!

மீனம்பாக்கம் சந்திப்பு—மாணவர் உலகம், காலமெல்லாம் நினைவுத் திரையில் வைத்து பூரித்து மகிழவேண்டிய நிகழ்ச்சி!

—எஸ்.ஆர்.

பீகார் பிரச்சினையில் ......

காங்கிரசு மேலிடத்தின் 'பதுங்கிப்பாயும் போக்கு'

'முன்னைய தவறுகள்' இப்போது தடைக்கல்லாக நிற்கின்றன!

நம்நாடு செய்தி நோக்கு

நாற்பது சட்டமன்ற உறுப்பினர்களுடன் அமைச்சரவையிலிருந்து வெளியேறிய பிந்தேசுவரி பிரசாத் மண்டல் தலைமையில்—கூட்டு அமைச்சரவை அமைக்க முயற்சி செய்த பீகார் மாநில காங்கிரசின் அவசர அவசரமான முயற்சிகள், நேற்று முதல் ஒரு தேக்க நிலையைப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

தனித்த மெஜாரிட்டி இல்லையேல், 'எதிர்க் கட்சியாக இயங்கவேண்டும்' என்ற காங்கிரசு மேலிடத்தின் கொள்கை முடிவு இப்போது தடைக்கல்லாக இருப்பதாக பீகார் மாநில காங்கிரசு வருத்தத்துடன் உணருகிறது.

இதற்கிடையில், 'இப்போதைய அமைச்சரவையிலேயே இன்னும் பல வேண்டத்தகாத திருப்பங்கள் விளையட்டும்; அதை ஒரு காரணமாக வைத்து எந்த ஒரு முடிவும் எடுக்கலாம்' என்று காங்கிரசு மேலிடம், 'நிதானித்துப் பாயும்' போக்கினைக் கடைபிடிப்பதாகத் தெரிகிறது!

சட்டமன்ற உறுப்பினர்களின் வெளியேற்றத்தால் அமைச்சரவை தோற்கடிக்கப்படும் நிலை சாத்தியமே! அந்த நேரத்தில், இப்போதைய எதிர்க் கட்சிக் கூட்டணியின் முதலமைச்சர் மகாமாய பிரசாத், மாநிலத்தில் புதுத் தேர்தல் நடத்தும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறவேண்டுமே தவிர, காங்கிரசின் திட்டப்படி மாற்று அமைச்சரவை அமைக்க அனுமதி அளிக்கக்கூடாது' என்று ஒரு கருத்தும் எழுந்துள்ளது.

மத்தியப் பிரதேசப் பிரச்சினையில் காங்கிரசு கையாண்ட தந்திரம், இங்கு ஒரு முன்மாதிரியாக எடுத்துக்காட்டப்படுகிறது!

"மத்தியப் பிரதேசத்துக்கு ஒரு போக்கு—பீகாருக்கு மற்றொரு போக்கா என்று நடுநிலையாளர்கள் கேட்டுவிட்டால் என்ன செய்வது?" என்பதில்தான் காங்கிரசு, கைகளைப் பிசையும் சங்கட நிலையில் இருக்கிறது!

பதவியில் அமருவதற்காகத் தனித்த பெரும்பான்மையில்லாத நிலையில் கூட்டு அமைச்சரவையில் இடம் பெறக்கூடாது என்ற கொள்கையும் ஒரு 'தடைக் கல்'லாக இருப்பதாகக் காங்கிரசுத் தரப்பினர் உணர்ந்து சங்கடப்படுகின்றனர்!

வருகிற வெள்ளியன்று புதுடில்லியில் இதற்கு ஒரு முடிவு கிடைக்க இருக்கிறது!

நாஜிப் படையைப் போன்றது சிவசேனை!

மத்திய அமைச்சரின் கடும் கண்டனம்

பம்பாய், ஆக. 28—

தென்னுட்டவருக்கு எதிராக மராட்டிர மாநிலத்தில் இயங்கும் 'சிவசேனை'யைப்பற்றி மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. பி. கோவிந்த மேனன் குறிப்பிடுகையில், நாஜி ஜெர்மனியின் 'சூருவளிப் படை'க்கு அதனை ஒப்பிட்டார்.

"வலிமை வாய்ந்த பொதுமக்கள் கருத்தின் மூலமே இந்தப் படையின் நடவடிக்கைகளை ஒடுக்க முடியும்; அரசும் தக்க நடவடிக்கை எடுக்கும் என்றுர்.

"நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் சென்று வேலை தேடவோ, வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவோ இந்தியக் குடிமக்களுக்கு மாற்ற முடியாத முழு உரிமை அளிக்கிறது அரசியல் அமைப்புச் சட்டம். அந்த உரிமை மறுக்கப்படுமானுல், அரசியல் சட்டத்தையே மறுப்பதாகும்" என்று அவர் மேலும் கூறினுர்.

பம்பாயில் உள்ள கேரளீய சமாஜத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு மத்திய அமைச்சர் கோவிந்த மேனன் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கருத்தறிவித்தார்.

அமைச்சர் முத்துசாமி

தொண்டையில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு தலைமை மருத்துவமனையில் இருந்து வந்த உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் ஆக. 28-ல் இல்லம் திரும்பினுர்.

யாருக்காக அழுகிருர்கள்?

"ஊையைச் சேர்ந்த ஒரு பஸ் உரிமையாளர் வீட்டில் கிருஷ்ண ஜெயந்திக்காக சர்க்கரை கிடைக்காமல் அலைந்து கடைசியில் கிலோ 7 ரூபாய் வீதம் 5 கிலோ சர்க்கரை வாங்கியிருக்கின்றனர்"

—'நவசக்தி' : 28—8—67

★

'சோஷலிசம்' என்ற வார்த்தையைச் சொல்லத் தெரிந்துவைத்துக்கொண்டே சோஷலிசத்தைப் பேசும் எத்தர்கள் யாருக்காக அழுதுவடிகிருர்கள், பார்த்தீர்களா?

பஸ் முதலாளி ஒருவருக்கு விழாக் கொண்டாடுவதற்குப் பெரும் அளவு சர்க்கரை குறைந்த விலையில் கிடைக்கவில்லையாம்! பாவம்! மாநில ஆட்சியைக் குறை கூறுவதற்கு இத்தகு மொட்டைச் செய்திகளின் நிழலில்தான் அவர்கள் துரத்தப் பட்டுவிட்டார்கள்! பாதாம் பருப்பு—ஏலக்காய்—குங்குமப் பூ—பன்னிர் முதலியவைகளை அந்தப் பஸ் முதலாளி சீராக வாங்கினுரா என்பதை, காங்கிரசு 'சோஷலிஸ்டுக் குழந்தை'கள் சொல்ல மறந்துவிட்டிருக்கின்றன!

ஏழைகளின் உப்புக்காக ஒரு பெரும் போராட்டத்தை நடத்திய காந்தியார், பஸ் முதலாளிக்குக் கிலோ கணக்கில் சர்க்கரை கிடைக்கவில்லை என்று குறைபட்டுப் புலம்பும் காங்கிரசுக்காரர்களை இன்று உயிரோடிருந்து காண நேர்ந்தால் இரத்தக் கண்ணிர் வடிப்பார்!

சர்க்கரை விநியோகத்திற்கும், விலைக் கட்டுப்பாட்டின் சீர்மைக்கும் மாநில அரசாங்கமல்ல—மத்திய அரசாங்கமே பொறுப்பு! இதனைப் 'புருப் பந்தயம்' நடத்தி ஞாயிற்றுக்கிழமைகளில் பொழுதுபோக்குவோர் தெரிந்து கொள்ள நியாயமில்லை! அரசியல் தெரிந்த அறிவாளிகளுக்கு அது தெரியும்!

மத்திய அரசின் விவேகமற்ற விநியோகக் கோளாறினுல், சர்க்கரைக்குக் கடுமையான தட்டுப்பாடு தோன்றியிருக்கும் இந்த நாளில், கிலோ ஒன்றுக்கு 7 ரூபாய் கொடுத்து 5 கிலோ சர்க்கரை வாங்கும் டாம்பிகப் பணக்காரனுக்கு வக்காலத்து வாங்கும் கைக்கூலி காங்கிரசுக்காரர்கள், அந்த பஸ் முதலாளி எந்தக் கடையில்—யாரிடத்தில் அந்த விலைக்குச் சர்க்கரை வாங்கினுர் என்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பார்களா?

தனி ஒருவருக்கு அதிக விலைக்கு 5 கிலோ சர்க்கரையை விற்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

அய்யா ஒரு சந்தேகம்! இந்த வெண் புருச் சேனைக்கு, 'இன்னின்ன விதத்தில் உடைகள்' என்றெல்லாம் கூறினுர்கள்!

ஆனுல் துணி, கதரா—இல்லை—'மில்'லா என்று சொல்லவில்லையே!

தெரியாமல் செய்த பிழையா? தெரிந்தே புரிந்த குற்றமா?

கழகம் வளர்ந்தது அடுக்கு மொழியால் அல்ல!

காங்கிரசாருக்கு அண்ணா பதில்

அம்பாசமுத்திரம், ஆக. 23—

"தி. மு. கழகத்தின் வளர்ச்சி பற்றிக் காங்கிரசுக்காரர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை!

"தி. மு. கழகம் அடுக்குமொழியினலோ, நடிகர் - நடிகைகளின் செல்வாக்கினலோ வளரவில்லை! கொள்கை பலத்தால்—இலட்சியப் பிடிப்பால் அது வளர்ந்தது!

"காங்கிரசுக்காரர்கள், 'நடிகைகளைக் கொண்டு கட்சியை வளர்க்கலாம்' என்று எண்ணினர்கள்; ஆனல் அந்த எண்ணத்திற்கு மக்கள் சரியான தீர்ப்பு அளித்துவிட்டார்கள்!

"தி.மு. கழக ஆட்சி ஆறு மாதத்தில் கவிழ்ந்துவிடும் — என்று காங்கிரசுக்காரர்கள் கூறுகிருர்கள்! என் பதவியைப் பற்றிக் கவலை இல்லை — ஆட்சியைக் கவிழ்ப்பது முடியாத காரியம்! காங்கிரசு அரசாங்கம் 20 ஆண்டுகளாகச் செய்யாத காரியங்களை நாங்கள் செய்கிருேம்! ருபாய்க்கு 1 படி அரிசி எங்களால்தான் போட முடியும்! வேறு கட்சிகள் வந்தால் முடியாது!

"மதுவிலக்கை ரத்துச் செய்யாமல் நல்ல முறையில் செயல்படுத்திவருகிருேம்!

"ஏழைகள் வாழவேண்டும்—என்பதே ஆட்சியின் நோக்கம்!

"அக்டோபர் மாதம் முதல் உணவு நெருக்கடி தீர்ந்துவிடும்! கொஞ்சகாலம் பொறுங்கள்! தி.மு.க. ஆட்சியால் மக்களுக்கு நன்மை கிடைக்கும்!"

★

நல்லெண்ண அடிப்படையிலேயே படி அரிசித் திட்டம்!

"ருபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்திற்கு மானியம் தரும் தற்போதைய அரசாங்கக் கொள்கை, விலைவாசியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பலவீனமான பகுதி மக்களுக்குக் காட்டும் நல்லெண்ண அறிகுறியே ஆகும்; தற்போதைய விலைவாசி உயர்வு நீடிக்கும் வரை இதுவும் நீடிக்கும்.

"உணவுத் தானியத்தின்மீதுள்ள அனைத்துக் கட்டுப்பாடுகளையும் நீக்குவது பற்றி இப்போது யோசிக்கப்படவில்லை. இது ஓர் உயர்மட்டக் கொள்கைப் பிரச்சினையாகும்—படி அரிசித் திட்டத்தோடு நேரடித் தொடர்பு கொண்டதல்ல."

அரசு நிர்வாகத்தில் தலையிடுவோர் யார்?

"தி.மு.க. ஊழியர்கள், அன்ருட நிர்வாகத்தில் தலையிடுகின்றனர் என்றும், அப்படிப்பட்ட ஊழியர்களால் அலுவலர்கள் அஞ்சுகின்றனர் 'என்றும் சில காங்கிரசுத் தலைவர்கள் கூறும் புகார்கள் உண்மையானவையல்ல! இதுபற்றித் திட்டவட்டமான நிகழ்ச்சிகள் என் கவனத்திற்குக் கொணரப்பட்டால், சம்பந்தப்பட்ட கழகத்தவர்மீது கடும் நடவடிக்கை எடுப்பேன்!

"'அரசாங்க நிர்வாகத்தில் கட்சி ஊழியர்கள் தலையிடுவது தவறு—விரும்பத்தகாதது என்றும் தமிழக அரசு திடமாக நம்புகிறது.

"இன்னும் ஓராண்டு அல்லது இரண்டாண்டுக் காலத்திற்கு ஆட்சிக்குப் புதியவர்களான என் கட்சிக்காரர்களைவிட முன்னுள் ஆளும் கட்சியினருக்கு அதிகாரிகளிடம் அதிகச் செல்வாக்கு இருக்கும்'

"'கடன் வசூலிப்பைத் தள்ளிப் போடுங்கள்' என, மத்திய அரசிடம் தமிழக அரசு கோருவதைக் காங்கிரசுத் தலைவர்கள் சிலர் கண்டிக்கிருர்கள்; இது நியாயமற்றது; ஏனெனில், இப்

கொங்கு மண்ணில் குடியாட்சி வித்து!

கோவை மாவட்டத்தில் கோபி செட்டிப்பாளையம் என்பது—1967 பொதுத் தேர்தலுக்கு முன்பு—அவ்வளவாக யாருக்கும் விளம்பரம் ஆகாத ஊர்!

பெரிய பெரிய மாளிகைகள் போல் வீடுகளைக் கட்டிக்காத்து, வருகின்ற விருந்தினரை மகிழ்ச்சிப் பொங்க வரவேற்றுப் பெருமைப்படுவதில் அந்தப் பகுதிப் பெருமக்களுக்குத் தனியான பாரம்பரியம் உண்டு! கொங்குநாட்டு மக்களின் மாண்பும் மாட்சியும், முழு அளவு இழை பின்னி ஓடும் பகுதி, கோபி வட்டாரம்!

எளிமையைப் பாழ்படுத்தாத அழகுணர்வும், அடக்கத்தை இழக்காத வீர உணர்வும் பெற்றுத் தமிழகத்தின் சராசரி ஊர்களில் ஒன்ருக விளங்கிய கோபி, கடந்த பொதுத் தேர்தலில் அகில இந்தியாவிலும் பெரும் புகழ் பெற்றுவிட்டது. முன்னுள் மத்திய உணவு அமைச்சரும், இந்நாள் காங்கிரசுக் கட்சியின் பிரச்சாரகருமானதிரு. சி. சுப்பிரமணியம் அவர்களை, சாதாரண கழகத் தோழர் பி. ஏ. சாமிநாதன், அந்தத் தொகுதி பாராளுமன்றத் தேர்தலில் தோற்கடித்தார்!

பொள்ளாச்சியில் அவரைப் போடுவார்கள்—அவரும் அங்குதான் போட்டியிடுவார்—என்று எதிர்பார்த்து, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. ப. நாராயணன், தோழர் சுப்பிரமணியத்தைத் தோற்கடித்துக் காட்டுவதாக ஊருக்கும் உலகுக்கும் அறிவித்தார்,

'இரும்பு மந்திரி—உணவு மந்திரி' என்று உலகப் புகழ் பெற்ற ஒருவரை எதிர்ப்பதற்கு, 'பணமோ அல்லது அது சம்பந்தமான பரிவாரப் பலமோ தேவை இல்லை' என்று அடித்துச் சொல்லித் தேர்தல் களத்திற்குத் தம்மைத் தயார் செய்து கொண்டிருந்த 'நாராயணன் அவர்களைப் பார்த்து கழகத் தோழர்களே வியந்ததுண்டு! 'சுப்பிரமணியத்தையாவது...... சாதாரண தி.மு.க. மனிதர் ஜெயிப்பதாவது.....' என்று காங்கிரசுத் தோழர்கள் சென்னை மேடைகளில் கர்ச்சனை செய்ததும் அனைவரும் அறிந்ததே!

பொள்ளாச்சியின் தேர்தல் நிலவரம் சென்னை நகரத்துத் தெருக்களில் காங்கிரசுத் தோழர்களால் 'சாங்கோபாங்கமாக' விமர்சனம் செய்யப்பட்டது! 'இந்த நாராயணன் அல்ல—அந்த வைகுண்டத்து நாராயணனே வந்தாலும் என்னை ஜெயிக்க முடியாது' என்று சுப்பிரமணியமேகூட சூளுரைத்தார்!

கடைசியில் பொள்ளாச்சித் தொகுதி இருந்தது; கழகத்து நாராயணன், அதே உறுதியோடும் உற்சாகத்தோடும் தேர்தல் போட்டிக்குத் தயாரானர்! ஆனல், சுப்பிரமணியத்தை அந்தத் தொகுதியில் திடீரெனக் காணோம்! தோழர் நாராயணனுக்கு அவர் பயந்துவிட்டாரா—அல்லது, 'கோபிக்குக் கொஞ்சம் விளம்பரம் வாங்கிக் கொடுப்போமே' என்று முடிவு செய்து விட்டாரா என்பவை இதுவரையில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை!

படிப்பட்ட கோரிக்கைகள் விநோதமானது அல்ல—செயற்கையானதுமல்ல; ஆனல், தன் நிதி நிலைக்கு ஏற்ப அதை ஏற்பதும் தள்ளுவதும் மத்திய அரசுக்கே உரியது!"

—அறிஞர் அண்ணா

(நெல்லைக் கூட்டத்தில்)

காங்கிரசுப் பெருந் தலைவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கும் சிலருக்கு, உலகம் அனைத்தும் தேர்தல் தொகுதி என்பதில் சந்தேகமே இருந்ததில்லை! காமராசர், மாஸ்கோவின் ஒரு பகுதியில்கூடப் போட்டியிட்டிருப்பார்! 'மாஸ்கோவில் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குத் தமிழகச் சட்டமன்றத்தில் இடங் கொடுக்கப்படுமா' என்கிற சட்டப் பிரச்சினைதான், அவரை விருதுநகரில் போட்டியிடச் செய்ததாம்!

விருதுநகரில் அவர் போட்டியிட்டது, தாம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமே என்பதற்காக அல்ல—எங்கு போட்டியிட்டிருந்தாலும் அமோகமான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படும் கவுரவம் அவருக்கு அப்போது இருந்ததாகக் காங்கிரசுப் பரிவாரங்கள் தெருவுக்குத் தெரு ஊளையிட்டுக் கொண்டிருந்தன! காமராசரும் அப்படித்தான் நம்பினர்!

விருதுநகருக்குப் பெருமை அளிப்பதற்காகத்தான் அவர் அங்கு போட்டியிட்டாரே தவிர, வேறு விதமாக வெற்றியில் அவருக்குத் துளியும் சந்தேகமே இல்லை!

விருதுநகருக்கு அவர் பெருமை தேடித் தந்தாரா என்பதில் கருத்து மாறுபாடுண்டு; ஆனல் அந்த நகருக்கு நல்ல விளம்பரம் கிடைத்தது மட்டும் உண்மை!

அதேபோல், சுப்பிரமணியம் அவர்களும், 'பொருள்கள் விலையாவதற்குப் பேர்போன சந்தையுள்ள பொள்ளாச்சியில் நாம் விலை போகமாட்டோம்' என்ற கிலியின் காரணமாகவோ—அல்லது, அந்த வைகுண்டத்து நாராயணனைக் காட்டிலும் உடுமலை நாராயணனுக்கு உடும்புப் பிடி போடுவதில உள்ள சாமர்த்தியத்தைத்தெரிந்துகொண்டோ—கோபித் தொகுதிக்குத் தாவி விட்டார்!

கோபித் தெருக்களில் தோற்கடிக்கப்பட்டதற்குப் பிறகு அவர், 'காவி உடுத்திவிடுவார்' என்று நாம் எதிர்பார்க்கவில்லை! ஆனல், இப்போது அவர் போகும் போக்கைப் பார்த்தால், அற்பத்தனத்தின் அடி ஆழம் வரை சென்று, அங்குள்ள காவி நிற மண்ணை எடுத்துத் தம் முகத்தில் அப்பிக்கொள்ளும் வரை அவர் ஓயப்போவதில்லை எனத் தெரிகிறது!

போகட்டும்! கோபியில் தோற்றுப் போனவரின் 'கோபதாபங்கள்', தமிழகத்தை ஒன்றும் செய்துவிட முடியாது! சுப்பிரமணியத்தைக் காட்டிலும் தமிழகம் மிகப் பெரிது! பெரிய மனிதராக வளர்ந்து விட்டவரைக் காட்டிலும், பெருந்தன்மையே தனக்கு முக்கியம் என்று முடிவு செய்துவிட்ட கோபி பகுதியை, தமிழகத்தின் சனநாயகச் சரித்திரம் தனித்த புகழுரைகளால் சிறப்பிக்கத் தவறப் போவதில்லை!

இந்தப் புகழுரைகள் தொகுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இதே நாட்களில், அந்தப் பகுதியிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு செய்தி, நம்மைப் பெருமைக் கடலில் ஆழ்த்தித் திக்குமுக்காட வைக்கிறது!

கொங்கு மண், இனித் தங்க மண் ஆகிவிடத் தீர்மானித்து விட்டிருக்கிறதா? பொருள் புழக்கத்தின்கூடவே புகழ்ப் பெருக்கத்தையும் அது குவித்துக்கொள்ள முனைந்துவிட்டதா? முடியரசர் காலத்தில் முக்கியமான இடத்தை வகிக்காது போன ஆத்திரத்தைக் குடியரசுப் பாரம்பரியத்தில் தணித்துக்கொள்ளத் துவங்கிவிட்டதா?

இருக்கலாம்; கொங்குநாட்டு மண்வளம் கழகத் தோழர்களின் மனவளத்தோடு இணையுமானல், எத்தகைய அற்புதங்களுக்கு வழிகோலும் என்பதை, கோபி வட்டத்தின் புஞ்சைப்புளியம்பட்டி கழகக் கிளை போட்ட தீர்மானம் தெள்ளெனத் தெரிவிக்கிறது.

"சனநாயகத்திற்கு ஏதேதோ விளக்கங்களைச் சொல்லும் வித்தகர்களே—உங்கள் விளக்கங்கள் அப்புறம் இருக்கட்டும்; எங்கள் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் சாதாரணத் தம்பிமார்களில் சிலர் சேர்ந்து எடுத்துள்ள முடிவைச் சீர்தூக்கிப் பாருங்கள், ஐயா! கழகத் தோழர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சனநாயகப் பயிற்சி அவர்கள் வாழ்வோடு கலந்து விட்டதைக் காணுங்கள், ஐயா! அறிஞர் அண்ணா அவர்கள் எத்தகு பண்பையும் பாரம்பரியத்தையும் இங்கு வளர்த்து வருகிருர் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் ஐயா"

என்றெல்லாம் புஞ்சைபுளியம்பட்டி கிளையின் தீர்மானத்தைப் படித்த பிறகு உரத்துக் கூவ வேண்டும் என்று நமக்குத் தோன்றுகிறது!

சோஷலிசம்—சனநாயகம் என்பவைகளை ஏட்டில் எழுதிவைத்துக்கொண்டு இருபதாண்டுக் காலமானலும் படித்துச் சொல்வோமே தவிர, செயலில் இறங்க மாட்டோம்; ஏனென்ருல், எமக்குப் பிரச்சார விளம்பரம் தேவையே தவிர, செயல் அல்ல—என்று தெரிவித்துக் கொண்டிருக்கும் காங்கிரசுக் குருடர்கள், புஞ்சைப்புளியம்பட்டி கழகக் கிளையின் தீர்மானத்தைப் படிக்கட்டும்! முதலமைச்சர் ஆன பிறகும் அறிஞர் அண்ணா அவர்களின் தேர்வுக்குத் தடைக்கல்லாக நிற்கத் துணிந்த காங்கிரசு அறிவிலிகள், சாதாரண பேருராட்சி மன்றத் தேர்தலில், கழகத் தோழர்கள் காட்டிக்கொள்ளும் கண்ணியத்தைக் கண்டு தலை குனியட்டும்!

அந்தக் கண்ணியமான செய்கை இதுதான்:—

புஞ்சைப் புளியம்பட்டி பேருராட்சி மன்றத்தில் மொத்தம் 11 இடங்கள்; அவற்றில் இரண்டு இரட்டை உறுப்பினர் வார்டுகள்; மொத்த உறுப்பினர் 13 பேர்.

கடந்த 30—1—65-ல் நடைபெற்ற ஊராட்சித்தேர்தலில், இருக்கும் 13 இடங்களிலும் கழக உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இது போன்ற நிலை காங்கிரசுக் கட்சிக்கு வாய்த்திருக்குமானல், புஞ்சைப் புளியம்பட்டித் தேர்தலையே கொட்டி முழக்கிப் பேசி, 'தமிழகமே அந்த ஊர்தான்' என்று கொக்கரித்து, மக்களின் காதுகளைப் பஞ்சாக்கி இருப்பார்கள்! கழகத் தோழர்களின் அடக்க உணர்வு அத்தனை இடங்களைப் பிடித்தும், குதியாட்டம் போட்டு விளம்பரப்படுத்திக் கொள்ள முடியவில்லை!

13 உறுப்பினர்களில் 2 பேர்—2, 11-வது வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக உறுப்பினர்கள் இயற்கையெய்திவிட்டார்கள்; காலியான அந்த இரு இடங்களுக்கும் 30—8—67-ல் இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்த இடைத்தேர்தலில் கழகம் போட்டியிடாமல் — எதிர்க் கட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென விரும்பி—அந்த ஊர்க் கழகக் கிளை முடிவெடுத்திருக்கிறது. இருக்கும் 13 பேரும் கழகத் தோழர்களாக இருப்பது சனநாயக வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. ஆகவே, இரண்டு பேராவது எதிர்க் கட்சியினர் இருந்தால்தான் நிர்வாகம் ஒழுங்குற நடப்பதற்குத் தூண்டுகோலாக அமையும் என்று அந்த ஊர்த் தோழர்கள் கருத்தறிவித்து முடிவெடுத்திருக்கின்றனர்.

ரூசோ எழுதிய—மில் விளக்கிய—ஜெபர்சன் பரிசோதித்த சனநாயகம், இங்கு சாதாரணமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது!

புஞ்சைப் புளியம்பட்டி கிளையின் தீர்மானம், எதிர்காலத் தமிழகத்து சனநாயக வாழ்வின் குறிப்பிடத்தக்க இலக்கியம். அறிஞர் அண்ணா அவர்கள் இத்தனை நாள் பாடுபட்டுத் தமது தம்பிமார்களைப் பயிற்றுவித்த உழைப்புக்கு விலைமதிக்கவொண்ணுத சான்று அது!

புஞ்சைப் புளியம்பட்டி கழகத் தோழர்களைப் பாராட்டுகிருேம்! சாதாரண இடங்களிலும் சனநாயகத்தைக் காக்கத் துடிக்கும் கழகத் தோழர்கள், பெரிய இடங்களில் அதைப் பேணிக் காப்பதற்கு எவ்வளவு கவனம் எடுத்துக்கொள்வார்கள் என்பதைப் புஞ்சைப் புளியம்பட்டியிலிருந்து வரும் செய்தியிலிருந்து உலகம் தெரிந்துகொள்ளட்டும்!

—தோழன்

இந்தியைத் திணித்தால் விபரீத விளைவு!

டில்லியில் அமைச்சர் நெடுஞ்செழியன் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 28—

"தமிழக அரசு அண்மையில் அளித்த மனுவின்படி, தேசிய ஒருமைப்பாட்டில் மத்திய காங்கிரசு அரசுக்கு நம்பிக்கை இருக்குமானல்—தென்னக மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்க விரும்பினல்—இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு ஆங்கிலமே தொடர்பு மொழியாக நீடிக்கச் செய்யவேண்டும்"

என்று தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், புதுடில்லியில், செய்தியாளரிடம் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மேற்படிப்புப் படித்துப் புரிந்துகொள்ளுவதற்கு ஆங்கிலத்திற்குப் பதிலாக ஒருகாலும் இந்தி பயன்படாது; அத்துடன், இந்தி மொழி பேசும் மக்கள், மற்றப் பகுதி மக்களைவிட ஒரு படி அதிக வாய்ப்புடன் இருப்பார்கள்.

"இதுவரை இந்தி மாநில மக்கள், தென்னிந்திய மொழி கற்பதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை; ஆனல் அதேசமயத்தில் நாங்களோ, இந்தி படிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிருேம்.

"இதே நிலைமை நீடிக்குமானல், விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும்; ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சியும், இந்தி வெறியர்களுமே அதற்குப் பொறுப்பாளியாவார்கள்!

"மத்திய அரசு தென் மாநிலங்களில் இந்தியைப் புகுத்தி, ஆங்கிலத்தைக் கைவிட முனைந்தால், அதனல் ஏற்படும் நிலைமைகளுக்கு மத்திய அரசேபொறுப்பாகும்."

அண்ணாவின் ஆற்றல்மிகு நிர்வாகம்

தனிப்பெரும் சிறப்புடன் திகழுகிறது தமிழக அரசு

குசராத் நாளிதழ் சூட்டும் புகழாரம்!

ஆமதாபாத், ஆக. 28—

“மற்ற எல்லாக் காங்கிரசு அல்லாத அரசுகளிலும் காணப்படாத தெளிவு—நிதானம்—பணிவு, தமிழகத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காணப்படுகின்றன. பெருமைப்படத்தக்க வகையிலான இந்த மாற்றத்திற்குக் காரணமானவர் திரு. அண்ணாதுரையாவார்”

என்று, ஆமதாபாத் நகரிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழான ‘வெஸ்டர்ன் டைம்ஸ்’ பாராட்டியிருக்கிறது. அந்த நாளிதழ் மேலும் கூறியிருப்பதாவது :—

“பெரும்பாலான வாக்குகளின் உதவியினால் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது வெளிமாநிலத்தவரும்—ஏன்? தமிழகத்திலேயே சிலரும்—ஐயப்பாடு கொண்டிருந்தனர்.

‘பிரிவினை எண்ணத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையில் கைவிட்டுவிட்டதா? தி. மு. க. தலைமைக்கு நிர்வாகத்தில் அனுபவம் இல்லையே? அந்தக் கட்சிக்குத் திட்டவட்டமான அரசியல் கொள்கை இல்லையே? சீரான—உறுதியான நிர்வாகம் நடக்குமா?’’ என்றெல்லாம் சிலர் ஐயப்பாடு தெரிவித்தார்கள்.

ஆனால், திரு. அண்ணாதுரை, எல்லா ஐயப்பாடுகளையும் போக்கிவிட்டார்.

திரு. அண்ணாதுரை, தி. மு. க. ஆட்சியில் தெளிவு—நிதானம்—பணிவு ஆகிய தன்மைகளைக் கொணர்ந்திருக்கிறார்!

காங்கிரசு அரசாக இருந்தாலும் சரி—காங்கிரசு அல்லாத அரசாக இருந்தாலும் சரி—இவ்விதத் தன்மைகள் இல்லை!

சாதாரணமாகத் தேர்தல் உறுதிமொழியைக் காப்பாற்றுவது என்பது அரிதாகும்; ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு, இரு முக்கிய நகரங்களிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கிறது; பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கத் தொடங்கிவிட்டது; அரசு பஸ்களில் கட்டணத்தைக் குறைத்துவிட்டது; தீவிரமாகத் தானியக் கொள்முதல் செய்தது!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், ‘தெற்குத் தேய்கிறது; வடக்கு வாழ்கிறது’ என்று முழங்கிவந்தனர். ஆனால் அதிகாரத்திற்கு வந்தவுடன், அதற்குரிய பொறுப்புடனும், அடக்கத்துடனும் நடக்க ஆரம்பித்தனர்.

அந்தக் கண்ணோட்டத்துடன் தான், மத்திய–மாநில அரசு உறவுப் பிரச்சினையை அணுகுகிறார்கள்.

‘தலைமை அமைச்சருக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆரவாரம் நடத்தலாகாது’ என்று மாணவர்களுக்கு திரு. அண்ணாதுரை அறிவுரை கூறியிருக்கிறார்; ‘மொழிச் சிக்கலைப் பொறுத்தமட்டில் தமிழகத்தின் நலனைப் பாதுகாக்கக்கூடிய சிறந்த நண்பர் திருமதி இந்திரா காந்தி; அவரது கரத்தை வலுப்படுத்த வேண்டும்’ என்று திரு. அண்ணாதுரை, மாணவர்களைக் கேட்டிருக்கிறார்; இது பாராட்டத்தக்கது.’’

மனித குலத்துக்கும் மேம்பட்ட பண்பாளர் ‘அண்ணா’

அறிவாளர்கள் அனைவரும் பாராட்டும் சீரிய செயலாற்றி வருகிறார்

கேரளத் தேசிய நாளிதழின் பாராட்டு

கேரளத்தின் பழம்பெரும் தேசிய நாளிதழான ‘மாத்ரு பூமி’ என்னும் மலையாள ஏட்டில் (கள்ளிக்கோட்டை : 25—8—67) ‘அண்ணாவேதான்’ என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள துணைத் தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு :—

“ ‘அதிகாரம் மனிதனைக் கெடுக்கும்’ என்றும், ‘அதிகமான அதிகாரம் மனிதனைப் படுபாதாளத்துக்குத் தள்ளும்’ என்றும் பரவலாகச் சொல்லப்படுவதுண்டு.

அது உண்மைதான் என்பதற்கு எவ்வளவு சான்றுகள் வேண்டுமானாலும் காட்ட முடியும்.

இதற்கு நேர்மாறாக, அதிகாரம் மனிதனை நல்லவனாக்குவதாயிருந்தால் மனத்தில் உறுதியான இலட்சியமுடைய அறிவாளிகள், போராட்ட வழியிலிருந்து அதிகாரத்திற்குத் திரும்பும்போது அப்படி நேரிடக்கூடும். அப்படிப்பட்டவர்கள் அரிதாகவே இருப்பர் என்பது மட்டும் நிச்சயம்.

சாதாரண மனிதரிலிருந்து மாறுபட்ட அவர்களை, ஓரளவு மனித இனத்தைவிட மேம்பட்ட ‘தேவாம்சம்’ பொருந்தியவர்கள் என்றேகூடச் சொல்லலாம்.

தாம், அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தாம் என்பதைத் தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை மெய்ப்பித்திருக்கிறார்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் தென்னகச் சுற்றுப்பயணத்தின்போது அவருக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்ட முடிவு செய்திருந்த இந்தி எதிர்ப்பு மாணவர்களை, அதிலிருந்து பின்வாங்கச் செய்தது அதற்கு உதாரணமாகும்.

போராட்ட மனோபாவம் கொண்டவர்களுக்கு இதில் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

நாட்டில், எதிர்ப்பு முழக்கங்கள் முழங்க வேண்டுமென்றும், சமாதானத்தை அலங்கோலப்படுத்த வேண்டுமென்றும் துடித்துக்கொண்டிருக்கும் மாணவ சமூகத்துக்கும் இதில் ஏமாற்றமேற்பட்டிருக்கிறது!

இருந்தும், ‘ஆர்ப்பாட்டங்கள் கூடாது’ என்பதில், முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார்.

இயற்கையாக, போராட்டம் மூலமாகவே வளர்ந்துவந்த ஒரு கட்சியின் தலைவர்—மேலும், இந்திக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதையுமே போர்க்கொடி எழுப்பச் செய்த ஒரு கட்சியினுடைய ஆட்சியின் தன்னிகரற்ற தலைவர்—இப்படிப்பட்ட மேலான ஒரு நிலையை மேற்கொண்டதை எண்ணும்போது நல்லவர் யாவ

(4-ம் பக்கம் பார்க்க)

‘தேசபக்தர்’கட்கு

வி. வி. கிரியின் இடித்துரை

மொழிச் சிக்கல் தீர அவர் கூறும் வழி

மதுரை, ஆக. 25—

“மற்றவர்கள்மீது குற்றங்காணும் அதே நேரத்தில் நாம் நமது கடமைகளைச் சரிவரச் செய்கிறோமா என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

“இன்னமும் இந்த நாட்டில் உணவுப் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் துறைத் தகராறுகள் ஆகியவை போன்ற பல பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலையே இருந்துவருகிறது.

“உண்மையிலேயே நாட்டின் தரத்தைக் காப்பதிலும், நாட்டின் மீது பற்றுக் காட்டுவதிலும், நல்லொழுக்கத்தைப் பேணுவதிலும் அக்கறை கொண்டவர்களாக நம்மவர்கள் இல்லை”

என்று, இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி இடித்துரைத்துள்ளார்.

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் அவர் பேசுகையில் மொழிச் சிக்கல் குறித்துக் குறிப்பிட்டதாவது :—

“மாநில அளவில் வட்டார மொழியையும், மத்திய அரசுடன் தொடர்புகொள்ள ஆங்கிலத்தையும், இந்தியையும் பயன்படுத்துவதன் மூலமே இந்த நாட்டின் மொழிச் சிக்கலைத் தீர்க்க முடியும்.’’

இந்திய ஆங்கிலம்!

“இந்தியாவில் இன்று கற்றுத் தரப்படும் ஆங்கிலமானது, பிரிட்டனில் பெரும்பாலோருக்கு ஓர் அந்நிய மொழியாகத்தான் உள்ளது”

என்று இங்கு வந்திருந்த எழுத்தாளரும், மொழிவல்லுநருமான டாக்டர் ஜான் மாலான் சொன்னார்.

“இந்தியாவில் பெரும்பாலோர், திகைப்பூட்டும் அளவுக்கு வெவ்வேறான உச்சரிப்புப் பாணியில் ஆங்கிலத்தைப் பேசுகின்றனர்; தரமான ஆங்கிலச் சொற்றொகுதியில் அடங்காத வேறு சொற்களையும் ஆங்கிலத்துடன் பயன்படுத்துகின்றனர்; இவையே அதற்குக் காரணமாகும்” என்றார் அவர்.

கோழிப் பண்ணை மூலம் எரிவாயு!

ஜப்பானிலுள்ள கோழிப் பண்ணைக்காரரான ஹிரோசி சசாக்கி என்பவர், இப்போது எரிபொருளுக்காகச் சல்லிக்காசைக்கூடச் செலவு செய்வதில்லை; அவரது சமையலறைக்கு வேண்டிய வாயுவை அவர் வளர்க்கும் கோழிகள் அளிக்கின்றன!

கோழிகளின் கழிவை என்ன செய்வது என்று அவர் பல ஆண்டுகளாகப் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தார்; பிறகு அவருக்கு ஒரு புதிய கருத்துத் தோன்றியது.

அவர் இரண்டு பெரிய தொட்டிகளைக் கட்டி, அவற்றில் கழிவுகளைக் கொட்டினார்; இத்தொட்டிகளை இறுக மூடி அவற்றுடன் பிளாஸ்டிக் குழாய்களைப் பொருத்தினார். தொட்டிகளுக்குள் உண்டாகும் ‘மெதேன்’ ஆவி, அக்குழாய் வழியாக அவருக்கு வந்துகொண்டே இருக்கிறது.

உள்ளூரிலுள்ள வாயு நிறுவனமொன்று சசாக்கியின் இந்த அரிய வாயு தயாரிப்பு முறையில் அக்கறை காட்டுகிறது.

‘கும்பமேளா கூட்டம்’—‘அலிபாபாவும் நாற்பது திருடர்களும்’

திரைப்படங்களல்ல—மத்தியப் பிரதேச அமைச்சரவைக்கு மறு பெயர்கள்!

நான்கு தடவைகளில் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்பட்டிருக்கும் 32 பேர்களைக் கொண்ட மத்தியப் பிரதேச அமைச்சரவை, ‘ஒரு கும்பமேளா கூட்டம்’ என்று அழைக்கப்படுகிறது!

அமைச்சரவையின் பட்டியல் இன்னும் முடிவடையவில்லை; ஐம்பது பேர் வரையில் உயர்த்தப்படலாம் என்றும் தெரியவருகிறது.

‘நல்ல மாற்றத்தின் மோசமான துவக்கம்’ என்று, அமைச்சரவையின் பூதாகாரமான தோற்றத்தைப் பற்றி பி. சோ. கட்சித் தலைவர் எச். வி. காமத் விவரித்துள்ளார்.

‘அமைச்சர்கள் எண்ணிக்கை அளவுக்கு மீறியதுதான்’ என்பதை அவர்களே உணருகிறார்களாம்!

இதில் வேடிக்கை என்னவென்றால், ‘இது ஒரு அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதைபோல’—என்று, தனது அமைச்சரவையைப் பற்றிக் கூறி ஓர் அமைச்சர், தனக்குத் தானே சிரித்துக்கொண்டிருப்பதுதான்!

முதலமைச்சர் கோவிந்த் நாராயண் சிங், எண்ணிக்கை அளவு பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை; ‘எல்லாப் பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் தந்துதானே ஆகவேண்டியிருக்கிறது?’ என்று சமாதானம் சொல்கிறாராம்!

அமைச்சரவை மாறுவதற்குக் கருவாக இருந்த குவாலியர் இராஜமாதா, ‘இதைவிடப் பெரிய எண்ணிக்கையுள்ள அமைச்சரவை, வங்காளத்தில் இல்லையா?’ என்று கேட்கிறாராம்!

மத்தியப் பிரதேச அமைச்சர்களின் மிக அதிக வயது 71; மிகக் குறைந்த வயது 26; முதலமைச்சர் 47-வது வயதில் இருக்கிறார்! துணை முதலமைச்சரின் வயது 36!

ஆங்கிலம் அந்நிய மொழியா?

“இந்திய மொழிகள் என்று கூறப்படுகிற 70 வட்டார மொழிகளைப் பேசுகின்றவர்கள், மொத்தம் 70 இலட்சம் பேர் என்று இந்திய அரசின் கணக்கெடுப்புத் துறையின் அறிக்கை கூறுகிறது.

“இந்த நாட்டில் ஆங்கிலோ—இந்தியர்கள் கணிசமான தொகையில் வாழ்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் ஆங்கிலம்தான் தாய்மொழி.

“இப்படியிருந்தும், ‘ஆங்கிலம் இந்திய மொழியல்ல’ என்று சிலர் விடாப்பிடியாகக் கூறி வருகின்றார்களே!”

என்று, பெங்களூரைச் சேர்ந்த திரு. கோதண்டராவ் வினவியிருக்கிறார்.

இந்திக்குப் புதுப்பெயர்

“இந்திப் பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்குக் கன்னடம் எப்படி அயல் மொழியோ அதே போல், கன்னடக்காரர்களுக்கும் இந்தி அயல் மொழிதான்.

“இந்தியை இவ்வளவு நாளும் ‘தேசிய மொழி’ என்று அழைத்துவந்தவர்கள். இப்பொழுது அதை ‘இணைப்பு மொழி’ என்ற புதுப் பெயரால் அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்!

மைசூருக்கும் சென்னைக்கும் இடையே—ஆந்திராவிற்கும் வங்காளத்திற்கும் இடையே—கேரளத்திற்கும் மாராட்டிரத்திற்கும் இடையே — இதேபோல் மற்ற மாநிலங்களுக்கிடையேயும், இந்தி ‘இணைப்பு மொழி’யாக இருக்கும் என்று கூறுகின்றவர்களை, அவர்களுடைய கற்பனைத் திறத்திற்காக வேண்டுமானாலும் மெச்சிக்கொள்ளலாம்; இவர்களால் அற்புதமான கற்பனைக் கதைகளைப் படைத்துத் தரக்கூடும்; ஆனால் நடைமுறைக்கேற்ற மொழிக் கொள்கையை வகுத்துத் தர இவர்களால் முடியாது”

என்று பெங்களூரைச் சேர்ந்த பி. எஸ். ஸ்ரீதரமூர்த்தி என்பவர் எழுதியிருக்கிறார்.

இந்தியை என்றும் ஏற்க மாட்டோம்!

இந்தித் திணிப்புக் கைவிடப்படும்வரை ஓய்ந்திரோம்!

ஆங்கிலம் மட்டும் இணைப்புமொழியாக இருக்கச் சட்டமியற்றுக!

தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் தமிழக மாணவர்கள் கோரிக்கை

சென்னை, ஆக. 28—

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் கோடைக் கானலிலிருந்து இங்கு வந்து சேர்ந்ததும், தமிழ் நாடு மாணவர் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவின் சார்பில் ஒரு தூதுக் குழுவினர் அவரைச் சந்தித்து, 'ஆங்கிலம் மட்டுமே இந்தியாவின் தொடர்பு மொழியாக இருக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்று கோரி விண்ணப்பம் கொடுத்தனர்.

'இந்தி தொடர்புமொழியாக்கப்பட்டால், தமிழுக்கும் அதே உரிமை வழங்கப்பட வேண்டும்' என்று அவர்கள் கோரினர்.

தலைமையமைச்சருக்கும்—அந்த மாணவர் குழுவுக்குமிடையே சூடான உரையாடலும் நடைபெற்றது. அந்த நேரத்தில் கவர்னர் திரு. உஜ்ஜல் சிங், முதலமைச்சர் அறிஞர் அண்ணா, மற்றும் அமைச்சர்கள் சிலரும் உடனிருந்து கவனித்துக்கொண்டிருந்தனர்; இந்தச் சந்திப்பு, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிகழ்ந்தது.

"இது உங்கள் மொழியைப் பற்றியோ, என் மொழியைப் பற்றியோ உள்ள பிரச்சினை அல்ல. நான் எந்த விதத்திலும் ஆங்கிலத்துக்கு எதிராக இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் எத்தனைப்பேர் ஆங்கிலம் பேசுகின்றனர்? நான் ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்த முடியுமா?"

என்று இந்திரா, மாணவர்களை நோக்கிக் கேட்டுவிட்டு மேலும் விளக்குகையில், 'ஒரு மாநிலத்தவர் மற்றொரு மாநிலத்தவருடன் பேசித் தொடர்பு கொள்ள ஒரு பொதுவான மொழி தேவை; ஆங்கிலம் இப்போது உலகத் தொடர்பு மொழியாக இருக்கும்போது, இந்தி இந்தியாவின் உள்நாட்டுத் தொடர்பு மொழியாக இருந்து வருகிறது; இந்தி, பேசுவோர் தொகை மற்ற மொழியினரை விட அதிகமாக இருப்பதால் தான், அந்த மொழி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

மாணவர்கள் :— "நீங்கள் இந்தியை விரும்புகிறீர்களா?— அல்லது இந்திய ஒற்றுமையை விரும்புகிறீர்களா?"

இந்திரா :—"தமிழ்நாடு தேசிய நோக்கிலிருந்து தனித்து இருப்பது நல்லது என்று நீங்கள் கருதுவீர்களானால் உங்கள் விருப்பம்போல் செய்யலாம்."

ஒரு மாணவர் :— "தமிழ்நாடு, இந்தியை ஆட்சி மொழியாக ஒப்புக்கொள்ளாது."

மற்றொரு மாணவர் :—"இந்திக்கு இணையான உரிமை தமிழுக்கும் வழங்கும்வகையில் சட்டமியற்ற வேண்டும்."

இன்னொரு மாணவர் :— "இந்தி ஆட்சி மொழியாக்கப்பட்டால் தமிழ்நாடு பாதிக்கப்படும் என அஞ்சுகிறோம்."

இந்திரா :— "தமிழக மாணவர்கள் கொண்டுள்ள கவலையைப் போக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்கிறேன்."

ஒரு மாணவர் :—"இந்தி திணிக்கப்படுவதை நாங்கள் சகித்துக் கொண்டிருக்கமாட்டோம். இது எங்களுக்கு வாழ்வா, சாவா என்ற பிரச்சினையாகும்.

இந்திரா :—"நீங்கள் தமிழையும், தமிழ்நாட்டையும் பற்றிப் பேசுகிறீர்கள்; கேரளம் போன்ற மாநிலங்களின் நிலை என்ன? எல்லாமொழிகளுமே சமவுரிமை பெற வேண்டும்."

ஒரு மாணவர் :—"மற்ற மாநிலங்களைப் பற்றி நாங்கள் பேச வரவில்லை; நாங்கள் தமிழையும், தமிழ்நாட்டையும் பற்றித்தான் பேசுகிறோம். நாங்கள் டில்லியிடம் நேரடியாக ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள விழைகிறோம்."

இந்திரா :—"நீங்கள் உங்கள் விருப்பம்போல் செய்ய உரிமை உண்டு; ஆனால், மற்ற மாநிலங்கள்இந்தியில் தொடர்புகொள்ள விரும்பினால் அதில் நீங்கள் குறுக்கிடக்கூடாது."

ஒரு மாணவர் :—"நாங்கள் அதைப் பற்றி எந்தவிதக் கவலையும் கொள்ளவில்லை."

மற்றொரு மாணவர் :—"தமிழ்நாடு இந்தியை ஆட்சி மொழியாக ஏற்காது."

இந்திரா :—"நாங்கள் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்; மற்ற மொழிகளையெல்லாம் விடுத்து, தமிழை மட்டும் இந்திக்கு இணையாக ஆக்கச் சட்டம் செய்வது என்பது இயலாத காரியம்."

[இந்தக் கட்டத்தில் அண்ணா அவர்கள் மாணவர்களைப் பார்த்து சுருக்கமாகக் கருத்தறிவிக்குமாறும், ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே பேசுமாறும் கேட்டுக்கொண்டார்.]

ஒரு மாணவர் :— "தமிழர்களாகிய நாங்கள், இந்தி அனுபவிக்கும் உரிமைகளைத் தமிழும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக நாங்கள் கொள்வதற்கு அனுமதியுங்கள்."

இந்திரா :—"இல்லை: நீங்கள் 14 மொழிகளையும் தொடர்புமொழிகளாக்க விரும்புகிறீர்கள். உங்களை நீங்கள் தனித் தீவாக ஆக்கிக்கொள்ளக்கூடாது. நாம் அனைவரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள்."

மாணவர் :—"எங்களுக்குத் தமிழ் தான் தேவை."

[இந்த நேரத்தில் மீண்டும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு—மாணவர்களைப் பார்த்து—'தலைமையமைச்சர் உங்கள் உணர்வுகளைப் புரிந்துகொண்டுவிட்டார்; அவற்றைக் கவனத்தில் வைத்துக்கொள்வார்' என்றார்.]

மாணவர்கள் விண்ணப்பம்

மாணவர்கள் தலைமையமைச்சரிடம் அளித்துள்ள விண்ணப்பத்தில், 1937 முதலே தமிழ் மொழியின் உரிமைக்காகப் போராடி வருவதை விளக்கியுள்ளனர்.

தாய்மொழியின் உரிமை காக்க ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் போராடி வந்திருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :—

"பலர், தாய்மொழிக்காகத் தங்கள் இன்னுயிரையும் செந்தீக்கு இரையாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

1965-ல் இந்தி எதிர்ப்பு உச்சநிலை பெற்ற நேரத்தில் பெரும் அளவில் தியாகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் தென்னாட்டு மக்கள், 'இந்தியைத் திணிக்கும் முயற்சி கைவிடப்படும்' என்று நம்பினர்; ஆனால்' அவர்கள் நம்பிக்கைக்கு மாறாக மீண்டும் முன்பு இருந்த அதே தீயசக்தி மேலோங்கிவிட்டிருக்கிறது!

பதினான்கு மொழிகளுள் ஒன்றான இந்திக்கு மட்டும் அனைத்திந்தியாவுக்குமான ஆட்சிமொழித் தகுதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியைத் தொடர்பு மொழியாகக் கொள்ள அரசு வற்புறுத்துமானால், 'தமிழுக்கும் அதே தகுதி தரவேண்டும்' என்று கோருவதைத் தவிர வேறு வழியில்லை.

உங்கள் ஆட்சி, ஆங்கிலத்தை ஓர் அயல் மொழியாகக் கருதுகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு, ஆங்கிலத்தைவிட இந்திதான் அயல் மொழியாகும்.

இந்தியாவில் ஒரே ஆட்சிமொழியாக ஆங்கிலத்தைக் கொள்வதற்கு வகை செய்யும் நோக்குடன் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் திருத்துவது ஒன்றின் மூலமே மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் காணமுடியும் என்று மாணவர்கள் உணர்கிறார்கள்.

மும்மொழித் திட்டம் என்பது இந்தி வெறியர்கள் தென்னாட்டு மக்களை ஏமாற்றுவதற்கான தந்திரம் ஆகும். எனவே, அதனை ஏற்க இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். 'இந்தி ஆட்சி மொழி' என்ற அடிப்படையின் மீதே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது; எனவே, இத்திட்டத்தை உடனடியாக அடியோடு கைவிட வேண்டும்.

இந்தியாவின் ஒற்றுமை தேவையா? அல்லது இந்தி ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமா?—இவற்றில் எது தேவை என்பதே பிரச்சினை. இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கூறுவீர்களானால், நாங்கள் இந்திய ஒற்றுமையைத்தான் ஏற்போமேயொழிய, இந்தியை அல்ல!

இந்திய ஒற்றுமையின் பேரால் இந்தி திணிக்கப்படுமானால், இந்தித் திணிப்பு முயற்சி அடியோடு கைவிடப்படும் வரை நாங்கள் ஓய்ந்திருக்கமாட்டோம்!"

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

செப். 15 முதல் 22 வரை கொண்டாடுவீர்!

★

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15.

அந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமது 58-வது வயதை முடித்து 59-ஆம் வயதினைத் தொடங்குகிறார்கள். தமிழ் நாட்டின் தற்போதைய சரித்திரமே—அதன் வாழ்வே—இந்த 59 வயது தலைவரின் தொண்டிலும் தியாகத்திலும் உருப்பெற்று வருவதை நாடு ஒப்புக் கொண்டுவிட்டது.

கழகத் தோழர்கள் கடந்த பல்லாண்டுகளாக பெருஞ் சிறப்போடும் அரிய ஏற்பாடுகளோடும் கொண்டாடி வரும் அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவினை, இந்த ஆண்டில் மேலும் சிறப்பாகக் கொண்டாடுமாறு கழக அமைப்புக்களையும், சார்பு—துணை மன்றங்களையும், கழகத் தோழர்கள் — ஆதரவாளர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

செப்டம்பர் 15 முதல் 22-வரையுள்ள ஒரு வார காலத்தை அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழா வாரமாகக் கொண்டு, நாள்தோறும் பொதுக்கூட்டங்கள் நடத்துதல்—ஏழைகளுக்கு உணவு அளித்தல்—பள்ளிச் சிறார்களுக்குப் பலகை, புத்தகம், இனிப்பு வழங்குதல் ஆகியவைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இயல் – இசை – நாடகம் எனும் முத்தமிழும் அந்த விழா வாரத்தில் நாடெங்கும் ஊர்கள்—தெருக்கள்—வீடுகள் தோறும் மாண்புற முழங்கட்டும். அந்த முழக்கத்தில், கழகக் கொள்கைகள்—அறிஞர் அண்ணா அவர்களின் சிறப்புகள்—பண்பு நலன்கள்—கழக அமைச்சரவையின் கடந்த ஆறு திங்கள் சாதனைகள் ஆகியவைகளை அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துச்சொல்லிப் பரப்புமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

விழா வார நிகழ்ச்சிகளில், அறிஞர் அண்ணா அவர்கள் தம் வாழ்வில் ஆற்றியுள்ள தொண்டு—தியாகம்—சாதனைகள், அவர் தலைமைதாங்கும் கழக அமைச்சரவையின் சிறப்புமிக்க பணிகள்—திட்டங்கள், கழகக் கொள்கைகளின் அருமை—பெருமை ஆகியவைகளை மட்டுமே எடுத்துச் சொல்லும் வகையில் இடம் பெறுதல் வேண்டும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

'அறிவகம்'
சென்னை-13
29—8—67

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

30—8—67

வத்தலக்குண்டு

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு வானொலித் திடலில்; தலைவர் : மு. கி. சுப்பிரமணியம்; பேசுவோர்: மா. இராசாங்கம் எம்.எல்.ஏ., தமிழ்மாறன், ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ.

மனித குலத்துக்கும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் அவரை மனத்தால் வாழ்த்தவே செய்வர்.

ஏனைய பல மாநிலங்களிலும் ஆட்சித் தலைவர்கள், ஆட்சியோடு கூடவே ஆர்ப்பாட்டங்களையும் துணையாக வைத்துக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், இது ஒரு ஆச்சரியம் தான்! அமைச்சர்கள், மத்திய அரசுக்கு எதிராக 'பந்த்'கள் நடத்துகிறார்கள்—ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமைதாங்குகிறார்கள் — சட்டமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் ஒருபோல் மத்திய அரசின்மீது விரோதமாகப் பேசிவருகிறார்கள்! அரசாங்க வெளியீடுகளிலும், சொற்பொழிவுகளிலும் பகிரங்கமாகவே மத்திய அரசைத் தாக்கியும், மத்திய ஆட்சியினர் முகத்தில் கரி பூசுகிற முறையிலும் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன!

அமைச்சர்களேகூடத் தலைமையமைச்சரின் வீட்டுமுன் 'சத்தியாக்கிரகம்' செய்ய முற்படுகின்றனர்!

இந்நிலையில் முதலமைச்சர் அண்ணாதுரையின் போராட்ட எதிர்ப்புக் கொள்கை, அவரை, அறிவாளிகளின் உள்ளத்தில், ஒரு உண்மையான 'அண்ணா' வாக உயர்த்தியிருக்கிறது!

இந்த 'அண்ணா'வைப் பின்பற்ற, நமது அமைச்சர்களிடை சில 'தம்பி'களாவது இருந்திருந்தால்......!"

டி. கே. சீனிவாசன்

மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினர்

சென்னை, ஆக. 28—

உடல்நலக் குறைவின் காரணமாக சென்னைத் தலைமை மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவந்த தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், இன்று மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினர்.

அவருக்கு சிகிச்சையளிப்பதில் அக்கறை காட்டி டாக்டர் ஜெகந்நாதன் ஒத்துழைத்ததாகவும், அவருக்குத் தம் உள்ளபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுவதாகவும் தோழர் டி. கே. சீனிவாசன் கூறினர்.

யாருக்காக அழுகிறார்கள்?

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

அளவுக்குப் பதுக்கிவைத்துள்ள வியாபாரியைப் பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்!

தோற்றுப்போன அவமானத்தாலும், 'கழக ஆட்சியின் பேரில் அவதூறு சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்' என்ற வெறியாலும் காங்கிரசுக் கூலிகள், மொட்டைச் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்க வேண்டாம்!

தொண்டுள்ளமும் துணிவும் இருந்தால், இதுபோன்ற செய்திகளில், வாங்கியவர் பெயர்—விற்றவர் விவரம் — ஆகியவைகளையும் வெளியிடட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.